

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
24-வது மகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

412

உ

குருபாதம்

அருணகிரிநாதர் அருளிய

# கந்தரநுபூதி

திருக்கயிலாய பரம்பரைத்

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த**

**பரமாசாரிய சுவாமிகளின்**

ஆக்ஞையின்படி

வெளியிடப்பெற்றது.


மாயூரம் குமரக்கட்டளை தேவஸ்தானம்

[விலை ரூ. 0–0–6]

1943

# முகவுரை

வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறைவிளங்க ஞானஅரசு நடாத்தும், திருக் கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 24-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி யிருக்கும் **ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆற்றும் அறப்பணி களுள் நூல்கள்வெளியிடுவதும் ஓர் பகுதி யாகும். அந்நூல்களுள் முருகப்பிரான் திரு வருட்டன்மையை விளக்கும் **கந்தரனுபூதி** என்னும் இந்நூல் இவ்வாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் குமரக்கட்டளை தேவஸ்தானத்தில் **ஸ்கந்தசஷ்டி உற்சவ வெளி யீடாக** வெளியிடப்பெறுகிறது. அன்பர்கள் யாவரும் நாடோறும் பாராயணஞ் செய்து வேண்டுவார் வேண்டுவனவற்றினைப் பெற்று உய்வார்களாக.

உ

குருபாதம்

# கந்தரனுபூதி

## காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே. 1

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினோன் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வளைபட் டகைமா தொடுமக் களொனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே. 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயா பரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே. 8

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சைலத் தெறியு
நிட்டூ ரநிரா குல நிர்ப்பயனே. 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோக சிகா மணியே. 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே. 12

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே. 14

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. 15

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே. 16

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
வதிகா வலசூர பயங் கரனே. 18

வடிவுந் தனமு மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேச முணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. 20

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டனனே. 21

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே. 22

அடி யைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேள் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதுளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. 25

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதாகம ஞான விநோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. 26

பின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. 27

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. 28

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. 39

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. 33

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லகிர்பா கரனே. 34

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
றுதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனு
ரோதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே. 37

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே.

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே. 43

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. 45

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

ஆறா றையுநீத் ததமேன் னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும் வேலவனே.

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் கிருபைசூழ் சுடரே.

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.

# வேல்

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.

—திருமுருகாற்றுப்படை.

பாலயிலுங் குழவியெனப் பாரிலுதி யாமல்
பாறையினுங் கடியமனப் பாவையர்மா லுறாமல்
சேலயிலுங் கொக்கெனவெம் தீமைபுரி யாமல்
சேனையிலும் யானையிலுஞ் சிந்தனைவை யாமல்

சூலையிலும் நமன்தூதர் வாதையிலும் படாமல்
சூறையிலுங் கொடியமனஞ் சுழன்றுதிரி யாமல்
காலயிலும் பாம்பயிலுங் கார்மயிலை உகைத்தோன்
கையயிலை மாலையினுங் காலையினும் பணிவாம்.
—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

## சேவல்

மஞ்சேவல் கொளுமகவான் வந்தேவல் புரிய
மகிதலமு மேவல்கொளும் மாசூர பன்மன்
நெஞ்சேவ லெனப்பிளந்து நிணங்கொறித்துச்
[சொரிசெந்
நீரருந்திக் கொக்கரித்து நிலவுலக மனைத்தும்
உஞ்சேவல் செய்யவிரு சிறைநீழல் பரப்பி
உவந்தேவல் விரைந்துகுக னுயர்வலக்கை
[யமரும்
செஞ்சேவற் கொடிக்கடியேன் தினமேவல் புரியத்
தீவினையு மெனதேவல் திறத்தினகன் றிடுமே.
—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

# 17

## மயில்

அருமையிலை யொருபொருளுக் கடிமையிலை
[பிறருக்கு
அந்தகனுக் காண்மையிலை அடியேன்பால்
[வருதற்கு
எருமையிலை சிறுமையிலை இன்மையிலை பகைஞர்க்கு
எளிமையிலை மடமயிலை இழிதகைமை
[யிலைநோய்
பொருமையிலைவறுமையிலை பொய்ம்மையிலைபிறவிப்
புன்மையிலை தீமையிலை பொறுமையிலை
[மகவான்
தருமையிலை வன்மயிலை மணந்ததிருத் தணிகைச்
சண்முகனு ருவந்தேறுந் தனிமயிலைத்
[தொழவே

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்

# தெய்வயானையம்மை

சங்கரிதன் மருமகளைச் சங்கரிதன் மகளைச்
சங்கரிக்குஞ் சங்கரனை மாமனெனுந் தயலை
வெங்கரிதந் திடுபிடியை விண்ணவர்கோன் [சுதையை
விண்ணவர்கள் பணிந்தேத்தும் விண்ணுலகத் [தணங்கைப்
பைங்கழுநீர் விழியாளைப் பைங்கழுநீர் நிறமே
படைத்தாளைப் பைங்கழுநீர் செங்கரங்கொண் [டாளைச்
செங்கமலை தருமமுதைக் கந்தரிடத் தமரும்
தெய்வயானையைத்தொழுது திருவருள்பெற் [றிடுவாம்.

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

## வள்ளியம்மை

மாதவனோர் மாதவனாய் மாதவஞ்செய் திடலும்
வனமானாய் வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப்
பூதலமங் கையருருவாய் அவதரித்து வள்ளிப்
பொருப்புறையும் பொருப்பர்மனை விருப்ப
[முடன் வளர்ந்து
தீதகலுந் தினைகாத்து வேங்கையுரு வெடுத்த
செவ்வேளை அவ்வேளைச் சேர்ந்திருகைக்
[கோளும்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமரும்
கன்னியெனும் வள்ளிகழல் உன்னிவழுத்
[திடுவாம்.

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

## நவவீரர்

பரையின் நூபுர மணிகளிற் பிறந்திடும் பாலர்;
பொருவில் சூரனைக் கிளையொடும் பிடுங்கிய புயத்தர்;

முருக வேளடி நிழலெனப் பிரிந்திடா முறையோர்;
விருது மேவிய நவமெனும் வீரரைப் பணிவாம்.

—திருப்பரங்கிரி புராணம்.

## வீரவாகு தேவர்

வடுத்தமா விருபிள வாகச் சோதிவேல்
விடுத்தவா னவனடி விடாது போற்றியே
அடுத்தவா னவர்சிறை யகற்றச் செம்மணி
கொடுத்தவாள் வீரவா குவைவ ழுத்துவாம்.

—திருச்செந்தூர்ப் புராணம்.

## முருகன்

அருவமு முருவு மாகி
அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலக முய்ய.

மாயையின் வலியோ னாகி மான்முத
 லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்ட மரசுசெய்
 துகநூற் றெட்டுக்
காயம தழிவின் றாகிக் கடவுளர்க்
 கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றாள்
 சென்னி வைப்பாம்.

மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணன்
 குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை
 வீரன் வந்தான்
ஏவருந் தெரித றேற்று திருந்திடு
 மொருவன் வந்தான்
தேவர்க டேவன் வந்தா னென்றனன்
 சின்ன மெல்லாம்.

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு
கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம
நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம வாறுமுக வாதிநம
சோதிநம தற்பர மதா
மெந்தைநம வென்றுமிளை யோய்நம
குமாரநம வென்று தொழுதார்.

## பொது

ஆறிரு தடந்தோள் வாழ்க;
அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க;
குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க;
யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க;
வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

—கந்த புர